# சிவகங்கை மாவட்ட முதன்மைக்கல்விஅலுவலரின்செயல்முறைகள்

**பிறப்பிப்பவர் : திரு.இரா.சுவாமிநாதன், எம்.எஸ்சி., பி.எட்., எம்.ஃபில்.**

ந.க.எண்.7818/அ1/2022 நாள். 12/10/2022

பொருள்: பள்ளிக்கல்வி – கருணை அடிப்படையில் நியமனம் – 2020-2021 & 2021-2022ம்ஆண்டிற்குரிய காலிப்பணியிட மதிப்பீடு கருணை அடிப்படையில் இளநிலைஉதவியாளர் பணியிடங்கள் நிரப்புதல் - ஆணை வழங்குதல் – சார்ந்து..

பார்வை:
1. அரசாணை (நிலை)எண்.18 தொழிலாளர்மற்றும்வேலைவாய்ப்புத் (Q1)துறைநாள்: 23.01.2020
2. சம்பந்தப்பட்டவரின்கருத்துரு
3. அரசாணை (நிலை) எண்.151 பள்ளிக்கல்வித் (SE1(1)) துறைநாள்: 09.09.2022.
4. தமிழ்நாடுபள்ளிக்கல்விஆணையரகஇணைஇயக்குநரின் (பணியாளர்தொகுதி) ந.க.எண். 39671/ஜே/இ4/2021, நாள்:10-10-2022

பார்வையில் காணும் அரசாணைகள், ஆணையரகத்தினால் வழங்கப்பட்ட அறிவுரைகள் மற்றும் பணிநாடுநர்களால் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள வட்டாட்சியரின் சான்றுகளின் அடிப்படையில் பணிக்காலத்தில் காலமான கீழ்க்குறிப்பிட்டுள்ள அரசுஊழியரின் வாரிசுதாரருக்கு தமிழ்நாடு அமைச்சுப்பணியின் கீழ்வரும் இளநிலைஉதவியாளர்பதவியில் கருணை அடிப்படையில் முற்றிலும் தற்காலிகமாக நியமனம் செய்து ஆணைவழங்கப்படுகிறது

| பெயர் மற்றும் முகவரி (திரு/திருமதி/செல்வி) | இறந்தஅரசுஊழியரின் பெயர், பதவி (ம) பணிபுரிந்தஅலுவலகம் / பள்ளி திரு./திருமதி. | இறந்ததேதி | நியமனஆணைவழங்கப்படும்அலுவலகம் / பள்ளி |
|---|---|---|---|
| T. சித்ரா தேவி, 7/3, நளன் தெரு, சிவகங்கை, சிவகங்கை மாவட்டம். | வி. பற்குணன், இளநிலை உதவியாளர், அரசு உயர்நிலைப்பள்ளி, படமாத்தூர், சிவகங்கை மாவட்டம். | 19/06/2014 | அரசு மேல்நிலைப்பள்ளி, அரசனூர் - திருமாஞ்சோலை சிவகங்கை மாவட்டம். |

1. நியமனம் பெற்றுள்ள நபர் இந்நியமன ஆணை கிடைக்கப்பெற்ற உடன் பணியில் சேரவேண்டும்.

2. மேற்கண்டவாறு பணிநியமன ஆணை வழங்கப்பட்டவருக்கு தமிழ்நாடு திருத்திய ஊதிய விதிகள் 2017ன்கீழ், அரசாணை (நிலை) எண்.303/நிதி (ஊதியக்குழு) த்துறை நாள்.11.10.2017ன்படி, Level-8, 19500-62000 என்ற ஊதிய தொகுப்பில் அடிப்படை ஊதியம் மற்றும் இதரப்படிகள் ஆகியவை பெறத்தகுதியுடையவராவார்.

3. நியமனம் பெற்றுள்ள நபர் பணியில் சேரும் போது உதவி மருத்துவ அலுவலரிடமிருந்து உடல்நலத் தகுதி சான்றினைப் பெற்று பணியில் சேர வேண்டும்.

4. இப்பணியாளர் ஓய்வூதியப் பங்களிப்புத் திட்டத்தின் (Contributory Pension Scheme) கீழ்மட்டும் பணியில் சேரத் தகுதியுடையவராகிறார்.

5. கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற்றுள்ள நபரால் பணிவாய்ப்புக்காக முன்னிலைப்படுத்தப்பட்ட கல்விச்சான்று மற்றும் இதர ஆவணங்கள் ஆகியவை உண்மையானவை அல்ல என்றோ அல்லது மதிப்பீடு செய்ய இயலாதவை என்றோ பின்னாளில் கண்டறியப்பட்டால் இந்நியமனமானது எவ்விதமான முன்னறிவிப்புமின்றி இரத்து செய்யப்படும்.

6. தனியர் தகுதிகாண் பருவகாலத்திற்குள் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறைநூல்தேர்வில்தேர்ச்சிபெறவேண்டும்.

7. நியமனம் பெற்றுள்ள நபர் பத்தாம்வகுப்பு பொதுத்தேர்வில் தமிழை ஒரு பாடமாக பயின்று தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும். இல்லையெனில் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் தமிழ்மொழி இரண்டாம்நிலை மொழித்தேர்வில் பணியில்சேர்ந்த இரண்டு ஆண்டுகளுக்குள் தேர்ச்சி பெற வேண்டும்.

8. பணிநியமனஆணையின்படிஅன்னார்பணியில்சேர்ந்ததற்கானபணியேற்புஅறிக்கையினை உடன்அனுப்பிவைக்குமாறுசார்ந்தஅலுவலர்கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

9. பார்வை1-ல் காணும் அரசாணையின்படி கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்படும் நபர்களின் பணியினை விதிகளின்படி, ஓராண்டிற்குள் பணிவரன்முறை செய்திட விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள சார்ந்த தலைமையாசிரியர்/வட்டாரக்கல்வி/ மாவட்டக்கல்வி அலுவலர் (இடைநிலை)/ மாவட்டக்கல்வி அலுவலர் (தொடக்கக்கல்வி) அலுவலர்களுக்குதெரிவிக்கப்படுகிறது

முதன்மைக்கல்வி அலுவலர்,

சிவகங்கை.

பெறுநர்:

T.சித்ரா தேவி, 7/3, நளன் தெரு, சிவகங்கை,

சிவகங்கை மாவட்டம்.

நகல்கள்:

1. தலைமையாசிரியர், அரசு மேல்நிலைப்பள்ளி, அரசனூர் - திருமாஞ்சோலை
2. மாவட்டக்கல்வி அலுவலர், (இடைநிலை) சிவகங்கை,
3. சென்னை-06, தமிழ்நாடு பள்ளிக்கல்வி ஆணையரக இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிது.

## சுருக்கம்

பள்ளிக் கல்வித் துறை - கருணை அடிப்படை பணி நியமனம் – பணியாளர் தொகுதி (மறைந்த) திரு V.பற்குணன் என்பவரின் மனைவி திருமதி T.சித்ராதேவி - இளநிலை உதவியாளர் பணியில் நியமனம் செய்யப்பட்டது - பணிவரன்முறை செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

பள்ளிக் கல்வி (ப.க.4(2))த் துறை

அரசாணை (1டி) எண்.197 நாள் 13.12.2023

திருவள்ளுவர் ஆண்டு 2054

சோபகிருது வருடம், கார்த்திகை 27

படிக்கப்பட்டவை:-

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்த(எம்)த்துறை, நாள் 01.08.2018.
2. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.032941/ஜே/இ2/2023, நாள் 08.08.2023.

---

**ஆணை**:-

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், சிவகங்கை மாவட்டம், படமாத்தூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்த திரு V.பற்குணன் என்பவர் 19.06.2014-ம் நாளன்று பணியிலிருக்கும் பொழுது இறந்துவிட்டார் எனவும், அவரது மனைவி திருமதி T.சித்ராதேவி என்பவர் கருணை அடிப்படையில் பணிவாய்ப்பு வழங்க கோரியுள்ளதன் தொடர்ச்சியாக, அவர் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை நிர்ணயம் செய்துள்ள அனைத்து நிபந்தனைகளையும் நிறைவு செய்துள்ளதன் அடிப்படையில், அன்னார், தமிழ்நாடு அமைச்சுப் பணியின் கீழ், பள்ளிக் கல்வித் துறையில் இளநிலை உதவியாளராக 14.10.2022 முற்பகல் முதல் தற்காலிகமாகப் பணியமர்த்தப்பட்டார் என்றும் தெரிவித்து தனியரின் பணியினை 14.10.2022 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, கருணை அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட தனியர்களின் பணியினை வரன்முறை செய்ய தேர்வாணையத்தின் இசைவு பெறத் தேவையில்லை என்பதால்

சிவகங்கை மாவட்டம், படமாத்தூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் இளநிலை உதவியாளராகப் பணியில் இருக்கும் போது காலமான திரு V.பற்குணன் என்பவரின் மனைவி திருமதி T.சித்ராதேவி என்பவர் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டு தமிழ்நாடு அமைச்சுப் பணியில், பள்ளிக் கல்வித் துறையின் கீழ் 14.10.2022 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிபுரிந்து வரும் நிலையில், அன்னாரது பணியினை அவர் தேவையான உடல் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்யலாம் என அரசு முடிவெடுத்து அவ்வாறே ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால் அவர் ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவைகள் ஏதும் இருப்பின், அவற்றை விதிகளின்படி பெறத் தகுதியுடையவராகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெ.குமரகுருபரன்,
அரசு செயலாளர்.

பெறுநர்
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை-6.
(பணிப்பதிவேடு மற்றும் அசல் ஆவணம்)
தனியர் (பள்ளிக் கல்வி இயக்குநர் வழியாக).
இருப்புக்கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.

9/4/2024

# சிவகங்கை மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்.04055/அ1/2023 நாள். /03/2024

---

பொருள்: கருணை அடிப்படையில் பணி நியமனம் - சிவகங்கை மாவட்டம் - படமாத்தூர் அரசு உயர்நிலைப்பள்ளி - இளநிலை உதவியாளர் - திரு.V.பற்குணன் என்பவர் 19/06/2014-ல் இறப்பு - வாரிசுதாரரான மனைவி திருமதி.T.சித்ராதேவி என்பவர் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாளான 14/10/2022 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து அரசால் வெளியிடப்பட்ட ஆணை அனுப்புதல் - தொடர்பாக.

பார்வை:
1. சென்னை-6, பள்ளிக்கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண்.032941/ஜே/இ2/2023 நாள் 29/02/2024.
2. அரசாணை (1டி) எண்.197, பள்ளிக்கல்வி (பக.4(2)த்துறை நாள் 13/12/2023.

********

சிவகங்கை மாவட்டம், படமாத்தூர் அரசு உயர்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்தபோது 19/06/2014-ல் காலமான திரு.V.பற்குணன் என்பவரின் வாரிசுதாரரான மனைவி திருமதி.T.சித்ராதேவி என்பவருக்கு கருணை அடிப்படையில் அரசனூர் திருமாஞ்சோலை அரசு மேல்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராக பணிநியமன ஆணை வழங்கப்பட்டு பணியில் சேர்ந்த நாளான 14/10/2022 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து பார்வை (2)-ல் கண்டவாறு அரசால் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்டவாறு பணிவரன்முறை செய்து வெளியிடப்பட்ட அசல் அரசாணையுடன் கீழ்க்கண்ட அசல் ஆவணங்கள் மற்றும் பணிப்பதிவேடு இத்துடன் இணைத்து அனுப்பலாகிறது.

இவற்றை பெற்றுக்கொண்டமைக்கு ஒப்புதலை உடன் அனுப்பிட சம்மந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். மேலும் மேற்காணும் பணிவரன்முறை அரசாணை குறித்து தனியரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளவும் சம்மந்தப்பட்ட தலைமையாசிரியர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

இணைப்பு:

1. பணிவரன்முறை செய்து அரசால் வெளியிடப்பட்ட அசல் ஆணை
2. இறந்த அரசு ஊழியரின் மனைவி கருணை அடிப்படையில் முதல் முதலில் பணிவாய்ப்பு கோரிய விண்ணப்பம் அசல்-1
3. 17 கலம் படிவம்.
4. இறப்பு சான்று அசல் - 1
5. வாரிசு சான்று அசல் - 1
6. ஒருங்கிணைந்த சான்று அசல் - 1
7. தமிழ்நாட்டில் எந்த மாவட்டத்திலும் பணிபுரிவதற்கான உறுதிமொழி படிவம் அசல் - 1
8. 10ம் வகுப்பு மதிப்பெண் பட்டியல் அசல் -1

(Sl.No.AA 0758801 / ப.எண்.073218/ APR - 1992

Sl.No.AA 1307558 / ப.எண்.506657/ APR - 1993)

10. காலக்கெடு சான்று அசல் –1

11. இறந்த அரசு ஊழியரின் பணிப்பதிவேட்டின் முதல் பக்க நகல்.

12. இறந்த அரசு ஊழியர் பணியினை பணிவரன்முறை செய்தபதிவுகள்

13. தனியரது பணிநியமன ஆணை அசல் -1

14. தனியரது பணிப்பதிவேட்டின் முதல் பக்க நகல்கள் –1

15. தனியர் பணியில் சேர்ந்த பதிவுகள் பணிப்பதிவேட்டின் பக்க நகல்-1

16. தனியரின் அசல் பணிப்பதிவேடு.

26/3/24

முதன்மைக்கல்வி அலுவலர்

சிவகங்கை

22/3/24

பெறுநர்

1. சம்மந்தப்பட்ட இளநிலை உதவியாளர் (உரிய வழியாக).

2. தலைமையாசிரியர்,

அரசு மேல்நிலைப்பள்ளி, அரசனூர் திருமாஞ்சோலை.